## மாயூரம் துலா காவேரி கும்மி
## சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதியது

## mAyuram tulA kAveri kummi
## by cirumaNavUr municAmi mutaliyAr
## In tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**

Our Sincere thanks go to the Tamil Digital Library /Tamil Virtual Academy for providing a scanned image/PDF of this work.

The e-text has been generated using Google OCR online tool and subsequent correction of the output file. We thank Mrs. Meenakshi Balaganesh for her assistance in the preparation of this work.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2021.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## மாயூரம் துலா காவேரி கும்மி
## சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதியது

**Source:**

மாயூரம் துலா காவேரி கும்மி
சிறுமணவூர் முனிசாமி முதலியார்அவர்களால் இயற்றப்பட்டு,
தமது சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
1906.

-----------

## மாயூரம் துலா காவேரி கும்மி.

உ
கடவுள் துணை - சிவமயம்

கும்மி
சித்திவிநாயக சிற்பரமே யெந்தன்
    சித்தத்திலோங்கிய தற்பரமே
முத்திக்குவித்தா முதற்பரமே சற்று
    முன்னடப்பாய்ஞானக் குஞ்சரமே. 1

அஞ்சுதலையானுக் கஞ்சானே வரு
    மஞ்சுதலைக்கரு ளஞ்சானே
கொஞ்சும்பரையிளங் குஞ்சரமே எந்தன்
    கூடத்துணையிரு ஷண்முகமே. 2

மாயூரக்காவேரி தீர்த்தமகிமையை
    மண்டலங்காண வுரைப்பதற்கு
தாயார்வாணி சரஸ்வதிமுன்வந்து
    தந்திடுவாள்நல்ல செந்தமிழே. 3

ஆயிரத்தியறு நூறுகோடிதீர்த்தம்
    ஆதிகயிலாய கெங்கையுடன்
ஓதியகிரேதா யுகந்தனிலே இந்த
    உலகைத்திருவலஞ் செய்திடுமாம். 4

சென்றயுகங்களோர் மூன்றிலுமே இந்த
தேசத்துஜீவ நதிகளெல்லாம்
ஒன்றாய்த்திரண்டு துலாமதியி லிந்த
உலகைத்திருவலஞ் செய்திடுமாம். 5

ஆதிகைலாச கெங்காபவானிதன்
ஆனைசேனைபரி வாரமுடன்
ஓதுமுலகத்து ஜீவநதியுடன்
ஒங்கிக்குலாவுந் துலாமதியாம். 6

தேவமாதமிது அற்பசியாமிதில்
தேவரெல்லாம்வந்து மூழ்குவராம்
மூவரும்முப்பத்தி முக்கோடிதேவரும்
மோட்சமாங்காட்சித் துலாமுழுக்காம். 7

மாயூரநாதர் திருவருளால் ஜெல
மண்டலகங்கைக் காவேரியிலே
நேயமாகப்பதி னெட்டாம்பெருக்கு
நிறைந்துவாரதைப் பாருங்கடி. 8

தெய்வகைலாயம் விட்டிரங்கி யம்மன்
தேவநதியெல்லாந் தான்முழுகி
துய்யமாயூரக் காவேரியிருகரை
துலங்கிவாரதைப் பாருங்கடி. 9

ஈசர்கைலாயம் விட்டிரங்கி யம்மன்
யீரேழுநதியுந் தான்முழுகி
நேசமாய்க்காவேரி கரையும்புரண்டிட
நெருங்கிவாரதைப் பாருங்கடி. 10

கங்கையமுனை சரஸ்வதிநர்மதை
கிருஷ்ணைகோதாவரி சிந்துநதி
துங்கபத்ரை முதல் யெங்கெங்குங்காவேரி

துலங்கிவாரதைப் பாருங்கடி. 11

ஆதிக்காவேரி மகத்துவத்தை இங்கு
யாரால் சொல்லி முடிவாகும்
வேதியராதியுந் தெப்பமிட்டு இதோ
வேதம்படிக்கிறார் பாருங்கடி. 12

தர்ப்பையுமட்சதை சந்தனமுங் கர்ம
தாரைக்கெள்ளுமலர் மஞ்சளுடன்
விற்பனவேதியர் மந்திரமோதிட
வெள்ளமிறைக்குறார் பாருங்கடி. 13

காவேரிகரை தன்னில் வந்துமேபூர்வக்
கர்மவிமோசனஞ் செய்வதற்கு
மூவேழுதலைமுறை பிதுர்க்கள் பேரையும்
முனைந்து சொல்கிறார் பாருங்கடி. 14

தண்ணீர்க்கரைதனில் மச்சுகட்டி கையில்
தர்ப்பையுமட்சதை யெள்ளுமிட்டு
புண்ணியவேதியர் மந்திரமோதிய
பொருமையருமையைப் பாருங்கடி. 15

காவேரிகெங்கையில் தீராதபாவங்கள்
காசிக்குப்போனாலு மில்லையென்று
பூவுலகாளு மரசருமக்களும்
போயிமுழுகுறார் பாருங்கடி. 16

எண்ணிமதிக்க முடியாது ஜெனம்
யெந்தெந்தவூரோ தெரியாது
தண்ணீர்த்திவலை மிகத்தெரிக்க முங்கி
தலையை முழுகிறார் பாருங்கடி. 17

எள்ளுக்கிடமுண்டோ பெண்ணரசே துகை

யெத்தனைக்கோடியோ கண்ணரசே
வள்ளலாமாயூர நாதர்மகத்துவம்,
வையகமுற்றும் மிகப்பெரிதே. 18

தேவகோட்டைமுதல் பட்டுக்கோட்டை யதின்
தென்கரைமட்டக் குளம்புமுதல்
தேவசைலநெல் வேலிதிருச்செந்தூர்
தெய்வஸ்தலத்துப் பலஜெனமும். 19

சிங்கைசிலோனெட்டு தூத்துக்குடிக்கரை
தென்மதுரைப்பரங் குன்றமுதல்
எங்குமுள்ளஜெனம் காவேரிக்கரை
யென்றாலென்ன மகத்துவமோ. 20

கடைமுழுக்கென்று கடைப்பிடியாய்வந்தும்
காலந்தவறிக் கண்ணீர்சொரிந்த
முடவனுக்காக முடமுழுக்குண்டாக்கி
மோட்சங்கொடுத்தக் காவேரியடி. 21

அன்னமேகாவேரி தென்புறம்பாரதோ
அரண்மனைத்தோட்டமென் றேவிளங்கும்
இன்னமுந்தஞ்சாவூர் மன்னன்குடும்பத்தார்
யிறங்கிமூழ்கும் படித்துறையாம். 22

நிலைக்கொண்ணாப் படித்துறையாம் வெகு
நீளக்காவேரி முதற்கரையாம்
தலைக்காவேரியைப் பாரும்பெண்ணே யிங்கே
தங்கிவெகுஜெனம் முங்குகிறார். 23

வல்லாளமன்னன் படித்துறையா மிங்கே
வர்னலட்சஞ்ஜெனம் முங்குவராம்
எள்ளளவுமனக் கள்ளமில்லாமன்னர்
யெத்தனைக்கோடியோ பாருங்கடி. 24

சேரனுஞ்சோழனும் பாண்டியனும் அவர்
சென்றபிறகாண்ட மன்னவரும்
தூராதூரமும் அஞ்சலிட்டு வந்து
துடர்ந்துமுழுகும் படித்துறையாம். 25

திருமலைநாயகர் சொக்கலிங்கமன்னன்
தேடித்துலாமதி முப்பதுவும்
தருமஞ்செழிக்கக் கொடிமரம்நாட்டியே
தவங்கள் செய்த படித்துறையாம். 26

எத்தனை ஜென்மத் தவப்பயனோ நமக்
கித்தனைக்காட்சி கிடைத்ததடி
அத்தனருளை நினைத்துக்காவேரியில்
ஆரஅமரத் தலைமுழுகு. 27

தலையைமுழுகி மயிராற்று நல்ல
தேங்காயுஞ்சூடனும் பூவாங்கு
நிலையாய்க்கோபுர வாசலிலே ஜென
நெருக்கம்வாங்கிநீ யுள் நுழைந்து. 28

நந்தியைமுந்தியே கண்டுக்கொள்ளு உள்ளே
நான்மணிமேடையில் வந்துதில்லு
விந்தைகெண்டாமணி நாகசுரமேள
வேதகீதத்தில் செவிநோக்கு. 29

அப்புறஞ்சன்னிதி முன்னேநில்லு தெய்வ
அர்ச்சகர்பாதம் வணங்கிக்கொள்ளு
கற்பூரந்தேங்காய் மலர்ப்பழந்தட்சணை
கையில்கொடுத்துநெய் தீபமிடு. 30

கையைப்பொதித்துவுன் வாய்பொதித்து மன
கண்ணையண்ணலடி மேற்பதித்து
துய்யமனத்தினா லையனடிமலர்

தோத்திரஞ்செய்வதே பாத்திரமாம். 31

அப்பார்சுந்தரர் சம்பந்தர்மாணிக்கர்
ஆதிசைவமர பாசான்கள்
செப்பியதேவாரப் பாசுரப்பண்சொல்லி
தோத்திரஞ்செய்குறார் பாருங்கடி. 32

அகத்தியர்தேவாரப் பண்ணிசையும் முந்தி
ஆதிதிருமூலர் மந்திரமும்
ஜெகத்துளன்பார்கள் மாயூரநாதனை
சேவித்துநிற்கிறார் பாருங்கடி. 33

முற்றிலும்பக்தர் முறைப்படியே கோயில்
மூலவர்உற்சவர் யாவரையும்
சுற்றிசேவித்துப் பசியாறு வந்து
சோலையில் குந்தி யிளைப்பாறு. 34

பாக்குவெற்றிலைத் தானருந்துபல
காரம்பழவகை மூட்டைகட்டு
நோக்குஞ்செனங்கள் துணைபிடித்து பெண்ணே
நீயுமிருப்பிடஞ் சென்றமரு. 35

அகத்தியர்தந்த தமிழ்வாழ்க சைவ
ஆரியர்நால்வர் பதம்வாழ்க
ஜெகத்திற்பெரியோர் சிறியோரியாவரும்
செழித்துவாழ்கவே கும்மியடி. 36

பட்டணந்தன்னிற் சிலமதிசூனியர்
பாச்சிசோச்சியென்று பாடுவதால்
விட்டசிறு நூலைத் திரும்பயானொரு
வேடிக்கையாகத் துடங்கினதே. 37

முன்னஞ்சிலநாளாய்ப் பாடுவதைப் பற்றி

முற்றுமுணர்ந்தானென் றெண்ணாதீர்
இன்னஞ்சிறியேன் சிறுமணவூர்முனி
யென்பானுளரும் பிழைபொருப்பீர். 38

## துலாகாவேரிகும்மி முற்றிற்று

*************************************

### காவேரியம்மன் கும்மி.

ஜெயப்பருவந் தன்னில்வந்து அம்மன்
தானேயுற்பத்தி யானவளாம்
நெல்லிமரத்தின்கீழ் மகாவிஷ்ணுபிர்மா
நினைக்கஉடன்வந்து னின்றவளாம். 39

பிர்மதேவருடன் கன்னிகையாம் அம்மன்
பிர்மாதிதோஷங்கள் தீர்த்தவளாம்
அறுபத்தாயிரங்கோடி தீர்த்தத்தோடம்மன்
அடர்ந்துவாரதைப் பாருங்கடி. 40

பழனிதன்னிலே வந்திருந்து அம்மன்
பழனிநதியில் ஸ்நானஞ்செய்து
பழனிமுருகரைக் கண்டுதெரிசித்துப்
பக்தியுடன் வாராள் பாருங்கடி. 41

மதுரைதன்னிலே வந்திறங்கி அம்மன்
மலர்தாமரையில் ஸ்நானஞ்செய்து
மாயசொக்கேசரைக் கண்டுதெரிசித்து
மகிழ்ந்துவாரதைப் பாருங்கடி. 42

கும்பகோணத்திலே வந்திறங்கி அம்மன்
கொடியபாபம் நிவர்த்திபண்ணி
கும்பகஜேந்திரனைக் கண்டுதெரிசித்து
கொந்தளித்துவாராள் பாருங்கடி. 43

மாயூரந்தன்னில் வந்திறங்கி அம்மன்
மகேஸ்வரரைப் பூசைபண்ணி
மாயலிங்கேசரைக் கண்டு தெரிசித்து
மாட்சியுடன்வாராள் பாருங்கடி. 44

பஞ்சனந்தன்னில் வந்திறங்கி அம்மன்
பாவங்களெல்லாம் நிவர்த்திசெய்து
பஞ்சகஜேந்திரனைக் கண்டுதெரிசித்து
பாவையிதோவாராள் பாருங்கடி. 45

சிதம்பரந்தனில் வந்திறங்கி அம்மன்
சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து
சபாநாதரைக் கண்டுதெரிசித்து
சட்டமுடன்வாராள் பாருங்கடி. 46

காஞ்சிபுரந்தன்னில் வந்திறங்கி அம்மன்
கம்பாநதியில் ஸ்நானஞ்செய்து
ஏகாம்பரநாத ரைக்கண்டுதெரிசித்து
இப்பொழுதேவாராள் பாருங்கடி. 47

--------------xxx--------